மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்.
முன்னிலை:– திருமதி.P. கோபால அரசி, B.Sc.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தான்குளம்.
2024 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 ஆம் நாள் புதன் கிழமை.
அ.வ.எண்.84/2019.
CNR No.TNTT10000672019.

1. குமாரசாமி (இறப்பு)
2. சௌந்திரராஜன்
3. கந்தசாமி (இறப்பு)
4. ஆதிலிங்கம்
5. செந்துர்பாண்டி ..வாதிகள்

/எதிர்/

1. S.A. ஹிப்துல் கரீம்
2. காமராஜ் .. பிரதிவாதிகள்

(இ.ம.எண்.653/2023 ல் 31.07.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி இறந்து போன 1ம் வாதியின் வாரிசுகளான 2 முதல் 5 வாதிகள் வழக்கின் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளனர்)

(இ.ம.எண்.712/2023 ல் 28.08.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவு படி பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டது)

இவ்வழக்கானது 04.11.2019 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, ஏற்கனவே 07.10.2023 அன்று வாதியின் வருகை தவறுகையின் காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டு, பின்பு இ.ம.எண்.310/2024 ல் 21.09.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, வாதிகளுக்காக வழக்கறிஞர் திரு.இ. இராவணசிவன் அவர்களும், 1–ம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திருவாளர்கள் ஜார்ஜ் A.H. வாசகன் மற்றும் A. ஜோ ஜெகதீஷ் ஆகியோரும், 2–ம் பிரதிவாதிக்காக

வழக்கறிஞர் திரு.T. பஞ்சாப் சேகர் அவர்களும் ஆஜராகி, 30.09.2024 அன்று 4ம் வாதி ஆஜராகியும், அவர் நிரூபண அபிடவிட் மூலம் வா.சா.2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டும், சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படாமலும், 16.10.2024 ஆகிய இன்று வழக்கானது வா.சா.2ன் குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்த நிலையில் வா.சா.2 ஆஜிரில்லாமலும், அனைத்து வாதிகளும் அழைத்தும் ஆஜரில்லாமலும், வாதிகள் தரப்பில் பிரதிநிதித்துவம் இல்லாமலும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

1. 1–ம் எதிர்வாதியால் 01.03.17–ல் ஏற்படுத்தப்பட்ட பதிவு செய்யப்படாத கிரைய ஆவணத்தினை சமூகம் நீதிமன்றம் குறிப்பிடுகிற தேதிக்கு 1 & 2 எதிர்வாதிகளை தனது வாதி பெயருக்கு கிரையப் பத்திரம் பதிவு செய்து கொடுக்க உத்தரவிடும் படிக்கும், 28.12.17–ல் நாளிட்ட 2ம் எதிர்வாதி பெயரில் ஏற்பட்ட கிரையம் வாதியை கட்டுப்படுத்தக் கூடியதல்ல என விளம்புகை செய்யும் படிக்கும், வழக்கின் செலவுத் தொகைக்கும் தீர்ப்பாணை பிறப்பிக்கக் கேட்டு வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இன்று வழக்கானது வா.சா.2ன் குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்த நிலையில் வா.சா.2 ஆஜிரில்லை. அனைத்து வாதிகளும் அழைத்தும் ஆஜரில்லை. வாதிகள் தரப்பில் பிரதிநிதித்துவம் இல்லை. ஆகையால் வழக்கானது, வாதிகளின் வருகை தவறுகையின் காரணமாக தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை குறித்து உத்தரவு எதுவும் இல்லை.

2024 ஆம் ஆண்டுஅக்டோபர் திங்கள் 16 ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd) P. Gopala Arasi, 16/10/2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

<u>வாதிகள் தரப்பு சாட்சி:-</u>

வா.சா.1/திரு. குமாரசாமி (1 வது வாதி)
வா.சா.2/திரு. ஆதிலிங்கம் (4 வது வாதி)

<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 01.03.2017 நாளிட்ட 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது. | அசல் |
| வா.சா.ஆ.2 | 28.12.2017 அன்று 2ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி எழுதி கொடுத்த கிரைய ஆவணம். | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 01.03.2017 அன்று 1ம் பிரதிவாதி வாதிக்கு எழுதி கொடுத்த பதிவு செய்யப்படாத கிரைய ஆவணம். | அசல் |
| வா.சா.ஆ.4 | 01.10.2018 நாளிட்ட உறுதிமொழி பத்திரம் | நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:-</u> இல்லை.

(Sd) P. Gopala Arasi, 16/10/2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

மா.உ.நீ., சாத்தான்குளம்.
அ.வ.எண்.84/2019.

வரைவு/நேரிய தீர்ப்புரை.

நாள்:– 16.10.2024.